



# jamaat ul sahih al islam – tamil nadu



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## ரமலானின் புறப்பாடு
## மற்றும்
## மனிதனின் படைப்பு

*ஹஸ்ரத் கலீஃப.்.த்துல்லாஹ்*
*முனீர் அஹ்மது அஸீம் (அலை)*

***22 May 2020***

**(28 Ramadan 1441 AH)**

*வெளியீடு*

*அமீர்,*

*ஜமா அத் தமிழ்நாடு*

***Phone No :- 917502272774***

# THE DEPARTURE OF RAMADAN & THE CREATION OF MAN

## ரமலானின் புறப்பாடு மற்றும் மனிதனின் படைப்பு

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்∴பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

நோன்பு நோற்கும் விதிமுறைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட கட்டமைப்பிற்குள் நின்று விடாமுயற்சியுடனும் மரியாதையுடனும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்ட எந்தவொரு செயலையும் முழுமையாக கைவிட வேண்டும்.

நோன்பு நோற்பின் உண்மையான நோக்கம் அதன் பொருள் மற்றும் உயிரூட்டும் ஆன்மா ஆகியவை இப்புனித மாதத்தில் நமது இதயத்தில் ஆதிக்கம் செலுத்த வேண்டும். இன்னும் சில நாட்களில் நமது சிறப்பு விருந்தாளியாகிய "ரமலான் மாதம்" நம்மிடமிருந்து விடை பெற்றுவிடும். நம்பிக்கை கொண்ட மக்களைப் பொறுத்தவரை இது துக்கமான தருணங்களாகும் ஏனென்றால் நமது சிறப்பு விருந்தினர் மிகுந்த துக்கம் மற்றும் கவலையோடு நம்மை விட்டு சென்று விடுகிறார். இந்த அருளுக்குரிய மாதத்திலிருந்து பயனடைந்தவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் ஏனெனில் அடுத்த ஆண்டு இந்த அருளுக்குரிய மாதத்தை நம்மில் எத்தனை பேர் மீண்டும் வரவேற்போம் என்பது யாருக்கும் தெரியாது.

இந்த ரமலான் மாதத்தில் நம்முடைய படைப்பாளனால் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து வகையான இபாதத்துகளையும் நடைமுறைக்கு கொண்டு வருவதன் மூலம் பெரும்பாலான நம்பிக்கையாளர்கள் இந்த அருட்களிலிருந்து பெரிதும் பயனடைகின்றனர். எனவே ரமலான் மாதம் என்பது அடுத்த பதினொரு மாதங்களுக்கான பயிற்சியின் காலமாகிறது. இன்ஷா அல்லாஹ்! நமது செவிப்புலன், பார்வை, நாவு மனம் மற்றும் அனைத்தையும் மிக கடுமையான சோதனைக்கு நாம் உட்படுத்தினோம். ஒரு நாளைக்கு ஐந்து முறை இறை வணக்கம் செய்யாதவர்கள் கூட இப்போது ஐந்து வேளை இறைவணக்கத்தில் ஏற்படுகின்றனர். இரவின் பிற்பகுதியில் தஹ்ஜுத் தொழுகை மற்றும் அதிகாலை ∴பஜர் தொழுகைக்கு எழும்பாமல் இருந்தவர்கள் இம்மாதத்தில் எழும்ப கற்றுக்கொள்கின்றனர். இந்த ஒழுக்கமானது ஒரு மாத காலம் முழுவதும் நடைமுறையில் இருப்பதால் அடுத்த பதினொரு மாதங்களுக்கு அது ஒரு மாதிரியாக செயல்படுகிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறினான், என் உண்மையான அடியார்களே, நான் உங்களுக்கு ஒரு சரியான புரிதலைக் கொடுக்கவில்லையா? இது பெரிய தியாகங்களைச் செய்ய உங்களுக்கு உதவியது. இது ஒரு சராசரி மனிதனுக்கு சுமக்க முடியாத ஒன்றாகும். ஆனால் இந்த சுமையை நீங்கள் என்மீது வைத்திருந்த அன்பினால் சுமந்தீர்கள். பின்வரும் வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி **“ஆனால் மனிதன் அதனைச் சுமந்து கொண்டான்”** (33 : 73)

முதலாவதாக நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதை அல்லாஹ் நன்கு அறிபவனாகயிருக்கின்றான். மட்டுமல்ல உண்மையில் நீங்கள் நீங்களாக மாறுவதற்கு முன்பே இறைவன் உங்களுடன் இருந்தான் என்பதையும் நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். நீங்கள் பிறப்பதற்கு முன்பே அவன் உங்கள் விதியைக் குறித்து நன்கு அறிகின்றான். உங்கள் விருப்பத்திற்கேற்ப எதையும் உங்களுக்கு மறுக்கலாம். ஏனெனில் மனிதன் / நம்பிக்கையாளர் இறைவனிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றிருக்கின்றான் அவர்களின் விருப்பத்திற்கேற்ப செயல்படுவதற்கான அனுமதியை இறைவன் அவர்களுக்கு வழங்கியிருந்தும் அவர்களை அவனே ஆளுகின்றான். மிக சிறந்த முறையில் உங்களுக்கு நிலைநிற்பை அவன் வழங்குகிறான். ஆகவே நீங்கள் உருவாகுவதற்கு முன்பு அதாவது நீங்கள் உங்கள் இருப்பை அனுபவிப்பதற்கு முன்பு நீங்கள் இருந்தது போலவே நீங்கள் அவனுடன் சேர்ந்து இருங்கள்.

உங்கள் பரிணாமவளர்ச்சியின் அனைத்து நிலைகளிலும் இறைதிட்டத்தால் நீங்கள் பாதுகாப்பாக இருந்தீர்கள் என்பதையும் நீங்கள் அறிய வேண்டும். உங்கள் பரிணாமவளர்ச்சியிலிருந்தே அவன் உங்களை கவனித்துக் கொணடிருந்தான். ஓவ்வொரு உயிரினங்களின் வாழ்வாதாரத்தை அவன் தீர்மானித்த நாளிலிருந்தே உங்கள் விதியை அவன் நிறுவிக் கொண்டான். அன்று **“நான் உங்கள் இறைவனல்லவா?** என்று அவன் அவர்களிடம் கேட்டபோது, அதற்கு அவர்கள் **“ஆம் நாங்கள் அதற்கு சாட்சியளிக்கிறோம்”** என கூறினார்கள்.

உங்களைப் பற்றிய இறைவனின் அக்கறையின் முதல் அடையாளம் என்பது அவனைப் பற்றி நீங்கள் தெரிந்துக் கொள்ளும்படியும், அவனைப் பற்றி நீங்கள் சிந்திக்கும் படியும் அவன் அவனை உங்களுக்கு வெளிப்படுத்திக் கொள்வதாகும். அவன் உங்களுக்கு பேசும் திறனைக் கொடுத்தான். அவனுடைய இறைதன்மையை ஏற்றுகொள்ள உங்களுக்கு அவன் ஆர்வமூட்டினான். அதன் விளைவாக நீங்கள் அவனுடைய ஏகத்துவத்தை ஏற்று அதற்கு சாட்சியளித்தீர்கள். பின்னர் அவன் உங்கள் தந்தையின் உடலில் ஒரு துளியை உருவாக்கின்றான். அத்தருணத்திலிருந்து உங்கள் பாதுகாப்பு அவனுடைய கரங்களிலாகும். மேலும் உங்களைச் சுமக்க வேண்டிய வயிற்றையும் அவன் பாதுகாக்கின்றான். உங்கள் தந்தை ஆதம் முதல் உங்கள் மூதாதையர்கள் வரை அனைவரையும் அவன்

உங்களுக்கு உதவிபுரிய அனுப்பினான். பின்னர் அவன் உங்களை உங்கள் தாய்மார்களின் வயிற்றில் வைத்தான், இந்த கருவறையை ஒரு பாதுகாப்பு இடமாக மாற்றுவதற்காக அதன் மீது அவன் சிறப்பு கவனம் செலுத்தினான். மேலும் நீங்கள் வளரும் மண் மற்றும் உங்கள் வாழ்மையை மிக பாதுகாப்பாக அமைக்க ஒரு இடத்தையும் வழங்கினான்.

உங்களை உருவாக்குவதற்காக விந்துகளை (உங்கள் தந்தை மற்றும் தாயின்) ஒன்றிணைத்தான். இந்த அனைத்து உயிரினங்களின் தோற்றமும் இறை இரகசியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த விந்திலிருந்து அவன் தனது விருப்பத்திற்கு ஏற்ப பரிணமிக்கத் தயாரான ஒரு கருவை வரைந்தான். அந்த கருவிலிருந்து அவன் உங்கள் வடிவத்தை அமைத்தான். உங்கள் உடல் உறுப்புகளை உருவாக்கி பின் அதில் தனது ஆவியை ஊதினான். உங்கள் தாயின் வயிற்றில் நீங்கள் இருப்பை எதிர்கொள்வதற்கு முன்பே அவன் உங்கள் உறுப்புகளை வலுப்படுத்த தேவையான நேரம் மற்றும் ஒன்றுக்கொன்று அவை திடமாக ஒன்றிணைய உதவும் அனைத்தும் அவன் அங்கு வைத்திருக்கின்றான்.

ஆகவே தற்போதைய இந்த அடையாளத்திற்காக அவன் உங்களை தயார்படுத்தினான். இதில்(பூமியில்) உங்களுக்கு, உங்கள் நோக்கம் கொண்ட நல்லது அல்லது தீயது ஆகிய அனைத்தையும் நீங்கள் பெறுவீர்கள். ஆனால் அவன் எல்லாம் வல்லவன், அவன் உங்களை பூமிக்கு அனுப்பிய போது உங்களுக்கு திடமான உணவை உண்ண முடியாது, அதை அரைக்க உங்களுக்கு பற்கள் இல்லை என்பதை அவன் அறிந்திருந்தான். இதனால் தான் உங்கள் தாயின் மார்பில் உங்களுக்கு ஒரு உணவை வைத்திருந்தான். அது உங்கள் வாய்க்கு எந்த சிரமத்தையும் ஏற்படுத்தாது. உங்கள் தாய்மார்களின் இதயத்தில் அவன் ஒரு கருணையை வைத்திருக்கின்றான். இது பாலின் உயர்வைத் தூண்டுகிறது. ஒவ்வொரு முறையும் எந்த தடையுமின்றி தாயின் மார்பகத்திலிருந்து பால் மீண்டும் வசந்தமாகிறது. உங்கள் நலன்களை பாசத்தோடும் இரக்கத்தோடும் கவனிக்கும் படி அவர் உங்கள் பெற்றோருக்கு அறிவுறுத்தினான். இது இறைவனின் இரக்கத்தை தவிர வேறொன்றுமில்லை. தந்தை மற்றும் தாயின் வடிவத்தில் இந்த அன்பை உங்களுக்கு வழங்குவது அவனைத் தவிர வேறொருவரல்ல. இதன் மூலம் அவனுடைய அன்பு மற்றும் இரக்கத்தை அவன் உங்களுக்கு தெரியப்படுத்துகிறான்.

உண்மையில் அவனுடைய இறையாண்மையை உங்களுக்கு ஏராளமானவற்றைக் கொண்டுவருகிறது. அவனுடைய தெய்வீகம் உங்களை உண்மையிலேயே கவனித்துக் கொள்கிறது. இறைவன் உங்கள் தந்தையை உங்களை பற்றிய அக்கறையினால் பருவமடையும் வரை உங்களுக்கு கல்வி வழங்கும்படி கட்டாயப்படுத்தினான். நீங்கள் பருவமடையும் வரை அவன் உங்கள் மீது எந்த மதக் கடமைகளையும் விதிக்கவில்லை. பருவமடைந்த பிறகும் தங்களுக்கு அவன் தனது உதவிகளையும் கிருபையையும் வழங்குவதை நிற்த்தி

விடுவதில்லை. மரணத்திற்கு பிறகு நீங்கள் அவன் முன் ஆஜராகச் செல்லும் போது, அவன் உங்களை தண்டனையிலிருந்து காப்பாற்றும் போது, உங்களின் பிரதிபலனின் இடத்தை அவன் உங்களுக்கு அறிமுகப்படுத்தும் போது, ஆம் இறைவனுக்கு அஞ்சிவாழ்ந்தவர்கள் சொர்க்கத்தின் தோட்டங்களிலும், ஆறுகளிலும் இடம் பெறுவார்கள். அவர்களின் நேர்மையானது அவர்களை எல்லாம் வல்ல இறைவனுடைய அருகில் அழைத்து செல்கிறது.

அவனுடைய அருட்களில் எதுவொன்றுக்கு நீங்கள் அவனுக்கும் மிகவும் நன்றி சொல்ல வேண்டும்? அவனுடைய எந்த உதவியை நீங்கள் மற்றவர்களுக்கு முன் எடுத்து கூற வேண்டும்? இந்த வார்த்தையை குறித்து நீங்கள் சிந்தியுங்கள் நீங்கள் பெறும் எந்த உதவியானாலும் அது இறைவனிடதிருந்து உங்களுக்கு வருகிறது என்பதையும், நீங்கள் எல்லா வகையிலும் இறை அருட்கள் மற்றும் உதவியிலிருந்து விலகி நிற்பதில்லை என்பதையும், அவனுடைய கிருபை உதவி மற்றும் அருட்களை உங்களுக்கு மறக்க முடியாது என்பதையும் நீங்கள் அப்பொழுது புரிந்துக் கொள்வீர்கள்.

ஆகவே நான் உங்களுக்கு விளக்கமளித்ததை நீங்கள் உணர்ந்து விடுவீர்களேயானால் நீங்கள் ஆன்மீக நீரில் நீராடி வந்த ஒரு குழந்தையைப்போல ரமலான் மிக தூய்மையான மாதமாக நீங்கள் புரிந்து கொள்ளீர்கள். நேர்மையுடன் நோன்பு நோற்கிறவர்களுக்கும், அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வதற்கும், தொழுமை மற்றும் நல்ல நடத்தை மூலம் இறை உதவியை நாடுவோருக்கு அல்லாஹ் வாக்குறுதி அளித்த அளவிற்கு இது ஒரு புனிதமான மாத மாகிறது. அதற்கான நற் கூலியானது அல்லாஹ்வே ஆவான். வேறுயாருமல்ல. நீங்கள் குறிப்பிட்ட நேரத்தில் உண்ணுவதையும் அருந்துவதையும் தவிர்த்தது மட்டுமல்லாமல் கோபம், அவதூறு மற்றும் அனைத்து வகையான ஆபாசங்களிலிருந்தும் விலகியிருந்தீர்கள். தேவையற்ற கலந்துரையாடல்களை தவிர்த்தது மட்டுமல்ல அதிகம் பேசுவதும் அல்லாஹ் மற்றும் அவனது பண்புகளை நினைவில் கொள்வதில் உங்கள் கவனத்திற்கு தடை ஏற்படுத்தும் அத்தகைய விஷயங்களிலிருந்து நீங்கள் விலகி நின்றீர்கள்.

மரண தண்டனை வழங்குவதற்கான ஒரு முல்லாவின் ஃபத்துவாவுக்கு எதிராக சமீபத்தில் நான் யூட்டுபில் (You tube post) ஒரு செய்தியை வழங்கியிருந்தேன். சீர்த்திருத்தத்திற்கான அதன் நன்மைகளை எவ்வாறு கைப்பற்றுவது என்று அந்த முல்லாவுக்கு தெரியாததால் ரமலான் மாதம் அவரை பொறுத்தவரை பயனற்றது என்பதை அவரது பத்துவா நிரூபிக்கிறது. என்னையும் என்னைப் பின் தொடர்பவர்களையும் புண்படுத்தும் முயற்சியில் அவர் கடந்த நூற்றாண்டில் இஸ்லாமிய நம்பிக்கையின் மறுமலர்ச்சிக்காக தோன்றிய, அக்காலத்தில் அல்லாஹ்வின் தூதராகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) மற்றும் அவரது போதனைகளையும் அவர் புண்படுத்துகிறார். இந்த முல்லாவும்

அவரைப்போல சிந்திப்பவர்களும், அஹ்மதியத்தின் எதிராளிகள் அஹ்மது (அலை) அவர்களை அவமானப்படுத்த பயன்படுத்திய வார்த்தைகளை மறந்து செயல்படுகின்றனர் . ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை எதிராளிகள் கா.ஃபிர் என்று அழைக்கின்றனர். மிர்ஸா குலாம் அஹமது காதியானியின் சொந்த ஃபத்வாக்களின்படி அவர் தன்னை கா.ஃபிர் என்று வரையறுத்தார் என்று எதிராளிகள் கூறுகின்றனர் ( நவுதுபில்லாஹ்) மேலும் இந்த எதிராளிகள் அவரை ஒரு பொய்யர் மற்றும் பைத்தியகாரர் என்று அழைத்தனர் மேலும் அவர் பொய் வெளிபாடுகளுடன் வந்த ஒரு பொய்யனாகிய தூதர் என்று கூறுகின்றனர். மட்டுமல்ல அவர் ஒரு பிரிட்டிஷ்காரர்களின் கைகூலி என்றும் ஆங்கில அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பயன்படுத்தி தனது தவறான கோட்பாடுகளை பரப்பினார் என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஜமா அத்தே இஸ்லாமின் தலைவரும் பாகிஸ்தான் சட்டமன்ற உறுப்பினருமான அப்துல் க.ஃபூர்கான் கூறினார் **“குறிப்பாக பிரிட்டிஷ் காலனிகளில் அவரது தவறான கோட்பாடுகளை பிரச்சாரம் செய்ய அவருக்கு அனைத்து வசதிகளையும் வெளிநாட்டு அரசாங்கம் வழங்கியது.”** ஆகவே இந்தகைய கேள்வியை அவர்கள் தங்களிடமே கேட்கட்டும். அஹ்மதிகள் இங்கிலாந்தில் குவிந்துள்ளனர். அதே போல் அவர்களின் கலீ.ஃபாவும் அங்குதான் இருக்கிறார். அஹ்மதிகள் இப்போதும் ஆங்கில இராணுவத்தின் பாதுகாப்பை நாடுகிறார்கள் இறைபாதுகாப்பை அல்ல.

மேலும் இந்த முல்லாவும் அவரை ஆதரிக்கும் அனைவருமே பாக்ஸ்தான் பாராளுமன்றம் ஏகமனதாக 1974 செப்டம்பர் 07 ம் தேதியன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றயது என்பதை மறந்து விடுகின்றனர் அதாவது அனைத்து காதியான் குழுவையும் முஸ்லீம்கள் அல்லாதவர்களாக அவர்கள் சட்டம் நிறைவேற்றினார்கள். அதன்படி அனைத்து அஹ்மதி முஸ்லீம்களையும் முஸ்லீம் அல்லாதவர்களாக வரையறுக்கப்பட்டது. முதல்கால அஹ்மதிகள் அனுபவித்த துன்பங்களை இன்றைய அஹமதிகள் மறந்துவிட்டனர். நமது அஹ்மதியா சகோதரர்கள் மற்றும் குழந்தைகள் தங்கள் நம்பிக்கையின் பெயரில் பள்ளி வாயில்களில் வைத்து கொலை செய்யப்பட்டனர் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். தொழுகைக்கு அழைப்பு விடுப்பதற்க்கு (பாங்கு) தடை விதிக்கப்பட்டது. பள்ளி வாயில்கள் மற்றும் கல்லறைகளிலிருந்து ஷஹாதா கலீமாவை நீக்கப்பட்டது, அது இன்றும் தொடர்ந்து வருகிறது.

அஹ்மதிகளுக்கு நேர்ந்த துரதிர்ஷ்டமான நிகழ்வை பார்ப்பது நமக்கு மிக பெரிய வேதனையாகிறது. இந்த புதிய நூற்றாண்டில் ஒரு மஸீஹின் வருகையுடன் வரலாறு மீண்டும் திரும்புவதை நீங்கள் உணரவில்லையா?

காதியான் உட்பட பஞ்சாபை அழித்த பிளேக் மூலம் அஹ்மதிகளுக்கு எதிராக நிகழ்ந்த துரதிர்ஷ்டங்களை பார்த்து அஹ்மதியத்தின் எதிராளிகள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் குடும்பத்தை சார்ந்த

ஒருவர் பிளேக் நோயால் இறந்தார் என்பதை தெரிந்த எதிராளிகள் கொண்டாடினார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மிர்ஸா கூட பிளேக் நோயால் பாதிக்கப்படுவார் என்றும் அவர்கள் சொன்னார்கள். இப்போது நீங்கள் கடந்த கால முல்லாக்களின் பாணியை பின்பற்றிக் கொள்கின்றீர்கள். உலகெங்கிலும் அஹ்மதிகளை எதிராளிகள் கொலை செய்வது தொடர்ந்து வரும் இக்காலத்தில் கூட! ஆகவே தாமதமாகிவிடும் முன் சிந்தித்து விரைவில் உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள். புனித ரமலான் வந்து விட்டது, மிக விரைவில் அம்மாதம் புறப்படும் முன் நீங்கள் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பை கோரி மனந்திரும்புங்கள். நிச்சயமாக அல்லாஹ் இரக்கமுள்ளவனும் மன்னிப்பவனுமாக இருக்கின்றான்.

ஆகவே, அல்லாஹ்வின் திருப்திக்காக ஒரு அசாதாரண ஒழுக்கத்தைக் அவர்கள் கடைப்பிடித்தார்கள். இந்த புனித மாதத்தில் கடைபிடிக்கப்பட்ட இந்த ஒழுக்கமானது வரவிருக்கும் பதினொரு மாதங்களுக்கு ஒரு முன்மாதிரியாக செயல்படட்டும் இன்ஷா அல்லாஹ்

இந்த சுமையை நீங்கள் சுமந்த பிறகு அல்லாஹ் உங்களுக்கு வழங்குகிறான் அதாவது நமக்கு வழங்குகிறான் ஒரு ஈது திருநாள் ஆனால் அதன் உண்மையான தத்துவத்தைப் புரிந்துகொள்பவர்கள் மட்டுமே அதை அனுபவிப்பார்கள். புதிய ஆடைகளை அணிவதை விட நாம் உணரும் மகிழ்ச்சி ஆழமானது. நிச்சயமாக ஆடைகளுக்கு ஈதுடன் ஒரு குறிப்பிட்ட உறவு இருக்கிறது. ஆனால் நம்மை காத்திருக்கும் இந்த ஈதுக்கு ஆடைகளுடன் எந்த தொடர்புமில்லை.

நல்ல ஆடைகளை வாங்க முடியாத ஏழைகளைப் பற்றி சிந்தியுங்கள். திருக்குர் ஆன் நமக்குச் சொல்லவில்லையா, இறையச்சத்தின் ஆடை – அதுதான் சிறந்தது. (7:27)

இந்த புனிதமான நோன்பு மாதத்தில் அல்லாஹ் நம்முடைய தியாகங்களை ஏற்றுக்கொள்வதற்கும் அவனுடைய மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்த ஒரு வாழ்க்கையை நமக்கு வழங்குவதற்கும் நம்முடைய எல்லா தவறுகளையும் மன்னித்து அவனது இரட்சிப்பின் கதவைத் திறந்து தருவதற்கு நாம் அனைவரும் ஒன்றாக பிரார்த்திப்போம் இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated by:**

**Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**